சேலம் ஒருங்கிணைந்த மாவட்டக் கழக செயல்வீரர்கள் கூட்டம் சேலத்தில் கழக முதன்மை செயலாளரும் நகர்புற வளர்ச்சி துறை அமைச்சருமான கே.என். நேரு தலைமையிலும் மாவட்டக் கழக செயலாளர்கள் இரா இராஜேந்திரன் எம்.எல்.ஏ., எஸ்.ஆர். சிவலிங்கம், டி.எம்.செல்வ கணபதி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற்றது. ஜூன் 11 ம் தேதி கழகத் தலைவர் தமிழ்நாடு முதலாமைச்சர் அவர்கள் வருகை குறித்து ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில் சேலம் ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள். அணைத்து அணிகளின் நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற தலைவர்கள். பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மதுரை புதூர் பேருந்து பணிமனையில் அரசு போக்குவரத்துக் கழக ஓட்டுனர்கள் மற்றும் நடத்துநர்களுக்கு குளிரூட்டப்பட்ட ஓய்வறையை வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி திறந்து வைத்தார். மற்றும் மதுரை, திண்டுக்கல், விருதுநகர் மண்டலங்களில் பணி புரிந்து ஓய்வுபெற்ற பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு பணப் பலன்களையும், தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற பணியாளர்களின் குழந்தைகளுக்கு பரிசுகளையும் வழங்கினார். உடன் வடக்கு சட்டமன்ற உறுப்பினர் கோ.தளபதி, மேலாண் இயக் குநர் ஆறுமுகம், பொதுமேலாளர் ராகவன், தொ.மு.ச. மண்டல செயலாளர் மேலூர் அல்போன்ஸ் மற்றும் அதிகாரிகள், போக்குவரத்து ஊழியர்கள் உள்ளனர்.

நெல்லை மாநகர தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

மாநகரக் கழக கூட்டத்தில் தீர்மானம்!

நெல்லை, ஜூன் 1 -

நெல்லை மாநகர திமுக செயற்குழு கூட்டம் நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் ஏற்பாட்டில் நெல்லை டவுன் லெட்சுமி மகாலில் நெல்லை மத்திய மாவட்ட கழக பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநில மகளிர் அணி செயலாளர், பாளையங்கோட்டை தொகுதி பார்வையாளர் ஹெலன்டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர், நெல்லை தொகுதி பார்வையாளர் வசந்தம் ஜெயக்குமார் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினார்.முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கழகத்தின் மூத்த முன்னோடிகள் 100 நபர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும் என தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

நெல்லை மாநகர தி.மு.க. செயற்குழு கூட்டம் நெல்லை டவுன் லெட்சுமி மகாலில் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான் தலைமையில் பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன் (தச்சை) அன்டன் செல்லத்துரை (பாளை) முன்னிலையில் நடைபெற்றது.நெல்லை பேட்டை பகுதி செயலாளர் நமச்சிவாயம் கோபி வரவேற்புரையாற்றினார். நெல்லை மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலைராஜா தீர்மானங்களை வாசித்தார்.தீர்மானங் களை வாசிக்கும் போது கழக தொண்டர்கள் உற்சாகத்தில் கைதட்டி ஆதரவு தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் கழக மகளிர் அணி மாநில செயலாளர் ஹெலன் டேவிட்சன், மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார் நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான் ஆகியோர் ஆலோசனை வழங்கி உரையாற்றினர்.

நிகழ்வில் தலைமை தீர்மானக் குழு உறுப்பினர் சீதாராமன், மாநில மகளிர் தொண்டரணி துணை செயலாளர் விஜிலாசத்யானந்த், மாநகர நிர்வாகிகள் அப்துல்கையூம், அண்ணாதுரை, அலிப் மீரான், ஒன்றிய செயலாளர் அருள்மணி, மாரியப்பன், கார்டன் சேகர், வெங்கடேஷ், முகமதுஅலி, இசக்கி பாண்டியன், சுரேஷ், ஜவகர், சிவசுப்பிரமணியன், பிரான்சிஸ், மணி, சேவியர், வதனகுமாரி, பாஸ்கரன், முக்கையா, மண்டலத் தலைவர் பிரான்சிஸ் (பாளை) மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் கருப்புசாமி கோட்டையப்பன், மகளிர் அணி ஜாய் மரகதம், சகாய ஜூலியட்மேரி, ரேவதி, மாமன்ற உறுப்பினர்கள் வில்சன் மணித்துரை, நித்திய பாலையா, சுந்தர், பவுல்ராஜ், உலகநாதன் உள்பட நெல்லை பேட்டை பகுதி, தச்சை பகுதி,பாளை பகுதி, மேல பாளையம் பகுதி, வட்ட கழக செயலாளர்கள், நெல்லை பேட்டை பகுதி, தச்சை பகுதி, பாளை பகுதி மேலப்பாளையம் பகுதி, கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சி நிறைவில் 27 வது வார்டு செயலாளர் கேபிள் குமரேசன் நன்றி உரையாற்றினார்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள் வருமாறு.

ஜூலை 03.06.2023ம் தேதி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட நான்கு பகுதிகளிலும் பொதுக்கூட்டங்கள் நடத்துதல்,கழக அரசின் சாதனைகளை விளக்கி தெருமுனைப் பிரச்சார கூட்டங்கள் நடத்துதல், 55 வார்டுகளிலும் கழக கொடியை ஏற்றி இனிப்புகள் வழங்குதல் முதியோர், ஆதரவற்றோர் இல்லங்களில் உணவு வழங்கி வெகு சிறப்பாக கொண்டாடுவது என்றும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் அவர்களின் அறிவுறுத்த லின்படி நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்ட கழகத்தின் மூத்த முன்னோடிகள் 100 நபர்களுக்கு பொற்கிழி வழங்கப்படும்.

2023 ஜூன் 3 முதல் 2024 ஜூலை 3 வரை முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும்" என்றென்றும் கலைஞர்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் மற்றும் பொதுக்கூட்டம் மாநகரத்துக்கு உட்பட்ட பகுதிகளில் நெல்லை மாநகர திமுக சார்பில் நடத்தப்படும்.

நெல்லை மத்திய மாவட்டப் பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான் தலைமையில் "வேர்களை தேடி" என்ற தலைப்பில் ஜூன் 10 முதல் ஜூலை 30 வரை மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரை ஒரு நாளைக்கு 3 வார்டுகள் என்ற வீதம் (1,2,3,4,5, 6,7,8,9) என்ற முறையில் நெல்லை மாநகரத்திற்கு உட்பட்ட 55 வார்டுகளிலும் பாளை தொகுதி பார்வையாளர் மாநில மகளிர் அணி செயலாளர் ஹெலன் டேவிட்சன், மற்றும் நெல்லை தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஜெயக்குமார் மற்றும் பகுதி செயலாளர்கள் முன்னிலையில் ஆய்வு செய்யப்படும்.

நெல்லை மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில் நெல்லை மாநகரம் பகுதியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் வெங்கல திருவுருவ சிலை நிறுவப்படும் என தீர்மானம் நிறைவேற்றிய மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன் கான், நெல்லை மத்திய மாவட்ட கழக நிர்வாகிகளுக்கும் நெல்லை மாநகர தி.மு.க. சார்பில் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

மாவட்டம் முழுவதும் கொண்டாட முடிவு!

தென்காசி, ஜூன் 1 -

தென்காசி வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செயற்குழு கூட்டம் புளியங்குடியில் உள்ள மூர்த்தி பாப்பா திருமண மண்டபத்தில் மாவட்ட அவைத்தலைவர் கோ.பத்மநாபன் தலைமையில் நடைபெற்றது. புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி வரவேற்றார்.

நிகழ்வில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்று ஆலோசனை வழங்கி பேசினார். கூட்டத்தில் சமூக நீதிக் காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டும் கழகத்தின் 75 ஆண்டுகால உதயத்தை முன்னிட்டும் ஒன்றிய, நகர, பேரூர், கழகத்தில் உள்ள அனைத்து கிளைகளிலும் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டுடன் கூடிய புதிய கொடிக்கம்பங்கள் அமைக்க வேண்டும் என தீர்மானிக்க ப்பட்டுள்ளது.

தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயற்குழு கூட்டம் புளியங்குடி மூர்த்தி பாப்பா திருமண மண்டபத்தில் மாவட்ட அவை தலைவர் கோ.பத்ம நாபன் தலைமையில், மாநில வர்த்தக அணி இணை செயலாளர் முத்துச்செல்வி, மாவட்ட துணை செயலாளர்கள் புனிதா, மனோகரன், ராஜதுரை, தலைமை செயற்குழு உறுப்பினர் பரமகுரு ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.புளியங்குடி நகர செயலாளர் அந்தோணிசாமி வரவேற்புரையாற்றினார்.மாவட்ட பொருளாளர் சரவணன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்.தலைமை செயற்குழு உறுப்பினர் சீனிவாசன் தீர்மானங்களை வாசித்தார். தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ பங்கேற்று ஆலோசனைகளை வழங்கி கலைஞர் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் சிறப்பாக வும், ஏழை, எளிய, மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் கொண்டாட வேண்டும் என்று கூறினார்.

கூட்டத்தில் பொதுக் குழு உறுப்பினர்கள் வேலுச்சாமி பாண்டியன், பத்திரம் சாகுல் ஹமீது, தேவதாஸ், மகேஸ்வரி, ஒன்றிய செயலாளர்கள் லாலா சங்கரபாண்டியன், பொன். முத்தையா பாண்டியன், பூசை பாண்டியன், வெற்றிவிஜயன், மதிமாரி முத்து, ராமச்சந்திரன், பெரியதுரை, சேர்மதுரை, கிறிஸ்டோபர், சங்கரன் கோவில் நகர செயலாளர் மு.பிரகாஷ், நகர்மன்ற தலைவர்கள் உமாமகேஸ்வரி (சங்கரன்கோவில்) விஜயா (புளியங்குடி) பேரூர் செயலாளர்கள் குருசாமி ரூபி. பாலசுப்பிரமணியன்,அணி அமைப்பாளர்கள் சிவசங்கரி, விஜயா, அன்னலட்சுமி, உமாமகேஸ்வரி, அண்ணாமலை,பொன்னுத்துரைச்சி,

சந்திரன் வழக்கறிஞர்கள் கண்ணன்,சதீஷ்,பிச்சையா,புளியங்குடி நிர்வாகிகள் காஜாமைதீன், கருப்பசாமி, அருணாசலம் சுரேஷ்குமார், விக்ரம், மணிகண்டன், முத்துக்குமார், மீனாட்சிசுந்தரம், குருராஜ், வெங்கடேஷ் உள்பட கழகத்தினர் திரளாக கலந்து கொண்டனர்.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு.

தமிழ்நாட்டின் கலாச்சாரத்தை தமிழர்களின் வீர விளையாட்டை பறைசாற்றும் வகையில் ஜல்லிக்கட்டுக்கு நிரந்தர தீர்வு காணும் வகையில் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்து வெற்றி பெற்ற தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களுக்கு தென்காசி வடக்கு மாவட்ட கழகம் நன்றி தெரிவித்துக் கொள்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் என்ற மாபெரும் இயக்கத்தில் 50 ஆண்டு காலம் தி.மு.க. தலைவராய் 5 முறை தமிழ்நாட்டின் முதலமைச்சராய் 13 முறை சட்டமன்ற உறுப்பினராக வெற்றி நாயகனாக வலம் வந்த முன்னாள் முதலமைச்சர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்த நாளை ஜூன் 3ஆம் தேதி தென்காசி வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய,நகர,பேரூர்,கழகங்களில் உள்ள அனைத்து கிளை கழகம் மற்றும் வார்டுகள் தோறும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செய்திட வேண்டும்.

சமூக நீதிக் காவலர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டும் தி.மு.க.வின் 75 ஆண்டு கால உதயத்தை முன்னிட்டும் ஒன்றிய, நகர, பேரூர், கழகங்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் கலைஞர் நூற்றாண்டு கல்வெட்டுடன் கூடிய புதிய கொடிக்கம்பங்கள் அமைக்கப்பட வேண்டும்.

ஒன்றிய, நகர, பேரூர், கழங்கள் சார்பாக பொது மக்கள் பயன்பெறும் வகையில், பள்ளி மாணவ,மாணவியர் பயன்பெறும் வகையில் நலத்திட்ட உதவிகள் வழங்கி விழாக்களை நடத்திட வேண்டும்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஒன்றிய, நகர, பேரூர், கழகம் சார்பில் டாக்டர் கலைஞர் அவர்களின் சாதனைகளை விளக்கி தெருமுனை பிரச்சார கூட்டங்கள், கருத்தரங்கங்கள், பொதுக்கூட்டங்கள் நடத்திட வேண்டும்.

நமது கழகத்தில் உள்ள அனைத்து சார்பு அணிகளும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை சிறப்பிக்கும் வகையில் ஆண்டு முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கியும், கருத்தரங்கள்,பொதுக் கூட்டங்கள் நடத்திடவும் வேண்டும்.

ஜூன் 20 முத்தமிழ் வித்தகர் கலைஞர் அவர்கள் திராவிட கருத்துக்களை கற்ற திருவாரூர் மண்ணில் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமார் அவர்கள் திறந்து வைக்க உள்ள கலைஞர் கோட்டம் சிறப்பு விழா நிகழ்ச்சியில் கலந்து கொள்ள தென்காசி வடக்கு மாவட்டக் கழகம் சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.இந்நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர், கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் தவறாமல் கலந்து கொள்வது என முடிவு செய்யப்பட்டது.

தமிழ்நாட்டின் நவீன சிற்பி கலைஞர் அவர்களின் நூற்றாண்டை சிறப்பிக்கும் வகையில் இல்லம் தோறும் கழக கொடி ஏற்றி சிறப்பிக்க வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

காரைக்குடி நகராட்சியை

மாநகராட்சியாக விரைவில் உயர்த்த வேண்டும்!

அமைச்சர் கே. என். நேருவிடம் காரைக்குடி நகர்மன்றத் தலைவர் கோரிக்கை!

சிவகங்கை, ஜூன் 1 -

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் ரூபாய் 140கோடியே 13லட்சத்தில் நிறைவடைந்த பாதாளச் சாக் கடை திட்டப் பணிகளை துவக்கி வைப்பதற்காக நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே .என் நேரு இம்மாதம் 27ஆம் தேதி காரைக்குடி வருகை புரிந்தார். அமைச்சர் கே.என்.நேருவை காரைக்குடி நகர்மன்ற தலைவர் எஸ்.முத்துதுரை வரவேற்றுப் பேசுகையில் கொடுத்த கோரிக்கை மனுவில் கூறியுள்ளதாவது. காரைக்குடி நகராட்சியை மாநகராட்சியாக்கப்படும் என்று அறிவித்த தமிழக முதல்வர் நகர்ப்புற அமைச்சர் இதற்கு உறுதுணையாக இருந்த கூட்டுறவுத்துறை அமைச்சர் ஆகியோருக்கு காரைக்குடி நகர் மக்களின் சார்பில் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். விரைவில் அறிவிப்பு வெளியிடுமாறு காரைக்குடி மக்களின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் முதல்வர் பதவி ஏற்ற நாள் முதல் அமைச்சர் கே. என். நேருகூட்டுறவுத்துறை அமைச்சர் கே ஆர்.பெரியகருப்பன் ஆகியோரின் ஆதரவில் காரைக்குடி மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்ய ரூபாய் 18 கோடிக்கான திட்டமும் அனுமதி வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றது. கடந்த ஓராண்டில் மட்டும் ரூபாய் 24கோடியில் பணிகள் துவக்கப்பட்டு நிறைவு பெற்றுள்ளது. இது தவிர பொது நிதியிலிருந்து ரூபாய் 8கோடியில் பல்வேறு பணிகள் நிறைவடைந்துள்ளது. நகராட்சி பள்ளிகள் அனைத்திலும் உள்கட்டமைப்பு வசதிகள் புதிய வகுப்பறை கட்டிடங்கள் ரூபாய் 22கோடியில் கட்டப்பட்டுள்ளது.

இதுவரை ஓராண்டில் நமது முதல்வர் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சியில் காரைக்குடி நகராட்சியில் மட்டும் ரூபாய் 54 கோடியில் மக்கள் வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகள் முடிவடைந் துள்ளது. மேலும் குடிநீர் திட்ட பணிக்காக ரூபாய் 3 கோடியே30 லட்சம் வாரச்சந்தை மேம்பாட்டிற்காக ரூபாய் 7 கோடி பழைய பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் கட்ட ரூபாய் 6 கோடி, எனமொத்தம் ரூபாய் 16 கோடியே 30லட்சத்திற்கான திட்டப்பணிகள் மேற்கொள்ள அரசின் பரிசீலனையில் உள்ளது. இது தவிர சாலை விரிவாக்கத்திற்காக ரூபாய் ரூபாய் 9 கோடி,மழைநீர் வடிகால் மற்றும் சிறுபா லங்கள் அமைக்க ரூபாய் 7கோடி, திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ரூபாய் 4 கோடி ஆக மொத்தம் ரூபாய்20 கோடிக்கான திட்டமதிப் பீடு தயார் செய்து அரசின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதனை விரைவாக அமைச்சர் அவர்கள் நிறைவேற்றி தருமாறு கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு நகர்மன்றத் தலைவர் வரவேற்றுப் பேசி கோரிக்கை வைத்தார்.

வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. பேசினார். அருகில் மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாவட்டபொருளாளர் நரசிம்மன், குடியாத்தம் எம்.எல்.ஏ. அமலுவிஜயன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் , மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கம்பத்தில் கலைஞர் நூற்றாண்டு விழா இறகுப்பந்து போட்டி!

வசந்தன் ராமகிருஷ்ணன் தலைமையில் !

தேனி , ஜூன் 1 -

தேனி மாவட்டம் கம்பத்தில் தேனி தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணியின் சார்பாக, முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாபெரும் இறகுபந்து போட்டி வரும் ஜூன் மாதம் இரண்டாம் தேதி நடைபெற உள்ளது.

இதற்கு தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வசந்தன்ராமகிருஷ்ணன் தலைமை தாங்குகிறார். மாநில தேர்தல் பணிக்குழு செயலாளர் செல்வேந்திரன், மாநில தீர்மானக் குழு இணைச் செயலாளர் ஜெயக்குமார், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பாண்டியன், கம்பம் நகர் செயலாளர்கள் வீரபாண்டியன், செல்வகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள். விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் வேல்முருகன், அருண் அரவிந்த், பிரசாந்த், பிரவின், கொடித்துறை ஆகியோர் வரவேற்கிறார்கள்.

இறகுப்பந்து போட்டியினை தேனி தெற்கு மாவட்ட கழக செயலாளரும், கம்பம் சட்டமன்ற உறுப்பினருமான கம்பம் ராமகிருஷ்ணன் மற்றும் ஆண்டிபட்டி சட்டமன்ற உறுப்பினர் மகாராஜன் ஆகியோர் துவக்கி வைக்கிறார்கள்.

மாநில விளையாட்டு மேம்பாட்டு அணிதுணைச் செயலாளர் வே. நம்பி பரிசுகளை வழங்குகிறார். முதல் பரிசாக 10 ஆயிரம் ரூபாயும், இரண்டாவது பரிசாக 7000 ரூபாயும் , மூன்றாவது பரிசாக 5 ஆயிரம் ரூபாயும் வழங்கப்பட உள்ளது. நிகழ்ச்சிக் கான ஒருங்கிணைப்பு பணிகளை அபு செய்து வருகிறார். போட்டிகள் கம்பம் மெட்டு சாலையில் உள்ள கிரீடம் அரேனா உள் விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளது.

திருச்சி தெற்கு மாவட்டக் கழகக் கூட்டம்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!

திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.கழகக் கூட்டம் இன்று (01/06/2023-வியாழன்) மாலை 5 மணி அளவில் மாவட்ட கழக அவைத்தலைவர் என்.கோவிந்தராஜ் தலைமையில் மாவட்ட தி.மு.கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர், தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை ஆண்டு முழுவதும் அவரது புகழுக்கு மென்மேலும் மாண்பு சேர்க்கும் வகையில் சிறப்பாகக் கொண்டாடுவது குறித்தும், மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைக் கழகத்தால் தற்போது வரை அறிவிக்கப்பட்டுள்ள அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்களாக உள்ளாட்சி அமைப்புகளின் துணை மேயர், மண்டல தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய, பேரூராட்சி பெருந்தலைவர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்.

அமைச்சர் **அன்பில் மகேஸ் பொய்யாமொழி**,
செயலாளர், திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.